# கவிஞர் வைரமுத்துவின் கவிதைகளில் வறுமைச் சித்திரிப்பு

**முனைவர் சு.பாரிபரமேஸ்வரன்**
*உதவிப்பேராசிரியர்*
*இளைஞர் நல படிப்பியல் துறை*
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம்*
*மதுரை-625021*

**முன்னுரை:**

இறைவனால் படைக்கப்பட்டது அல்ல வறுமை. மனிதன் தனக்குத் தானே உருவாக்கிக் கொண்டதுதான் வறுமை. “வறுமை கொடியது அதிலும் இளமைக்கால வறுமை மிகக் கொடியது என்று பாரதியார் அந்தக் கொடிய வறுமையின் பட்டறிவு கொண்டு வையமதில் வறுமை ஓர் கொடுமை அன்றோ” என்று பாடியுள்ளார்.மேலும்

***“தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்***
***ஜகத்தினை அழித்திடுவோம்”*** [1]

என்கிறார் பாரதியார். நாட்டின் பட்டினி என்னும் கொடிய நிலை மாறவேண்டும் என்ற நோக்கத்தில் பாடியுள்ளார். அவர் பாடி பல ஆண்டுகள் கடந்து சென்றாலும் அந்நிலை மாறிய பாடில்லை என்பதாக வருத்தப்படுகிறார்.

***“ஒரு பிச்சைக் காரன்***
***கையில்***
***வயிற்றைப் போலவே***
***காலியாயிருந்த திருவோடு”*** [2]

என்பதிலிருந்து இன்றைய வறுமையின் உச்சக்கட்டத்தை கவிதையில் விவரித்துள்ளார் கவிஞர். பிச்சைக் காரன் வறுமையினால் பிச்சை எடுக்கிறான். அவன் வயிறு காலியாக இருப்பது போலவே கையில் உள்ள அவனது பாத்திரமும் காலியாக இருக்கிறது என்பதை வறுமையின் கோரநிலையை எடுத்துரைக்கிறார்.

இது போலவே, ஒரு சமுதாயத்தின் மேம்பாட்டிற்கு பெரிதும் தடைக்கல்லாக இருப்பது வறுமை. இதனை நன்கு உணர்ந்தவர் கவிஞர் வைரமுத்து அவர்கள் எனவே அவர் தம் கவிதை வரிகளில் பல இடங்களில் வறுமையை எடுத்துரைக்கிறார் என்பதை ஆய்வு செய்வதாக அமைகிறது இக்கட்டுரை.

**வறுமை கொடிது:-**

வைரமுத்து அவர்கள் தம் பழைய கால நினைவை எடுத்து உரைக்கும்போது தம் வகுப்புத் தோழிக்கு வறுமையின் காரணமாக ஏற்பட்ட நிகழ்வினை தம் கவிதையில் வெளிப்படுத்துகிறார்.

“சலவைத் தொழிலாளியின் மகளொருத்தி பள்ளியில் எங்களோடு படித்தாள். ஒரு மழை மாதத்தில் அவளுக்கு உடுத்திக் கொள்ளத் துணியில்லை போலும், சலவைக்கு வந்த ஆடைகளுள் ஒன்றை அணிந்து பள்ளிக்கு வந்து விட்டாள். அது அவளது சகமாணவியின் உடையாம் உடைக்குச் சொந்தக்காரி அவளை உலுக்கி எடுத்து விட்டனர். பத்துப் போர் மத்தியில் துச்சாதனி ஆகவும் துணிந்து விட்டாள். ஆந்த அவமானம் தாங்காமலும் ஏழ்மையிலும் துக்கத்திலும் அவள் அன்று அழுத கண்ணீர் இன்னும் என் கையில் திட்டுத் திட்டாய்....

இந்த நிகழ்வை தம் கவிதை மூலமாக உணர்ச்சி பொங்க வெளிப்படுத்துகிறார்.

***“ஆடைதான் மானமாம் மனிதர்க்கு***
***அன்று***

*ஆடைதான் அவமானம் அவளுக்கு*
*ஆடைவழியே கண்களெல்லாம்*
*தன் நிர்வாணம் பார்ப்பதாய்த்*
*தன் முகத்தை அவள் தரையில் போட்டாள்*

*கேலி மொழி பெருகப் பெருக*
*ஒடுங்கி ஒடுங்கி உள்ளடங்கினாள்*
*ஆடைக்கு உரிமை க்காரி*
*ஜாதி சொல்லி விளித்தாள்*
*துடைப்பத்திற்கு ஏனடி*
*பட்டுக் குஞ்சம் என்றாள்*
*இந்த அழுக்கைச் சலவை செய்ய*
*எந்த கங்கை போவதென்றாள்”*[3]

சமூகத்தின் பல பிரச்சனைகளுக்கு காரணமாக இருப்பது வறுமை வளரும் நாடுகளின் வரிசையில் உள்ள இந்தியா வறுமையின் அடிப்படையில் உலக நாடுகளில் எந்த இடத்தை வகிக்கிறது என்பதை வைமுத்து அவர்கள் தமது பின்வரும் கவிதை வரிகள் மூலம் சுட்டிக் காட்டியுள்ளார்.

*“இங்கே*
*தேசியக் கொடி கூட*
*காற்றைச் சுரண்டு மொரு*
*கண்ணீர்க் காலத்தில்.......*

*உலகத்து வறுமை நாடுகளில்*
*பத்தாம் இடத்தில்*
*பாரதம் இருக்கு மொரு*
*பட்டினிப் பொழுதில்.........*

*உன்னை*
*நினைவு கொள்ள வேண்டிய*
*நிர்பந்தம் எமக்கு”*[4]

மேலே தரப்பட்டுள்ள மேற்க்கோள் வரிகள் ‘இன்னொரு தேசிய கீதம்’ என்னும் கவிதை நூலில் 60 ஆம் பக்கத்தில் உள்ள (நிலத்தை ஜெயித்த விதை) என்ற தலைப்பின் கீழ் இடம் பெற்றுள்ளன.

1947-ஆம் ஆண்டு ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை அடைந்து விட்டோம். உலகில் மிகப் பெரிய ஜனநாயக நாடாகவும் நம் பாரதம் பீடு நடை போடுகிறது எனினும் நாம் இன்னும் வறுமையின் பிடியில் இருந்து விடுபடவில்லையே என்ற இந்தியாவின் முன்னால் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களின் ஏக்கத்தை வைரமுத்து அவர்கள் தம் கவிதை வரிகள் மூலமாக நம் சமுதாயத்திற்கு உணர்தகுகிறார்.

*“வெள்ளையனை வீழ்த்தியபின் ஏதோ நாமும்*
*விடுதலையை அடைந்திட்டோம் ஆனால் நம்மைக்*
*கொள்ளையிடும் வறுமைக்கும் கல்லா மைக்கும்*
*கொடுமைக்கும் நாமடிமை என்றார் நேரு.”*[5]

உலகின் பல இடங்களில் இன்று நிகழும் தீவிரவாதத்திற்கு முதல் காரணமாக இருப்பது இந்த வறுமையை சுட்டிக் காட்ட வந்த கவிப் பேரரசு அவர்கள் வறுமையை புழு என்றுக் குறிப்பிடுகிறார்.

*"வறுமைப் புழக்கள் வந்து நெளியும்*
*வாழ்க்கை மலத்திலே – என்*
*வசந்த மனது புதைந்த தென்ன*
*வருத்தக் குளத்திலே?*
*பொறுமை பொறுமை பொறுமை என்று*
*புலம்பும் கதைகளே! – அந்தப்*
*புலம்பல் மேட்டில் பூத்த தென்ன*
*சூன்ய விதைகளே!*

*இருட்டுச் சுவர்கள் இடிந்த போதென*
*இதயம் இருண்டது – ஏனோ*
*ஏக்க விழியின் ஈரக்கண்ணீர்*
*எழுந்து திரண்டது"*[6]

நம் சமுதாயத்தில் வாழும் மக்களின் வாழ்க்கையில் நிகழும் அவலம், வறுமையினால் ஏற்படும் இந்த அவலத்தை பின்வரும் கவிதை வரிகள் மூலமாக கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் மனம் வெதும்ப தம் உணர்வை வெளிப்படுத்துகிறார்.

*"ஆடுகள் போல இங்கே*
*அலைந்திடும் மனித மந்தை*
*வீடுகள் தோறும் இங்கே*
*விரக்தியின் பெருமூச் சுக்கள்!*
*கேடுகள், கொடுமை, தென்னங்*
*கீற்றைப் போல் கிழிந்த வாழ்க்கை*
*தேடுங்கள் இவைகள் எல்லாம்*
*திரையிலே கருக்கொள்ளட்டும்"*[7]

இச் சமூகத்தில் தினமும் உழைத்து, உழைத்து தேய்ந்து போகும் உழவர்கள் இன்னும் வறுமையில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஊண்ண உணவும், உடுத்த உடையும் இன்றி வாடும் உழவர்களின் நிலை கண்டு வெதும்பிய நம் தமிழ் கவிஞன் வைரமுத்து அவர்கள் பின்வருமாறு தமது உணர்வை வெளிப்படுத்துகிறார்.

*"வாடகை தர இயலாமல்*
*வருகிற – சண்டையால்*
*இப்போது நானிருந்து*
*இருபத் தேமாவது வீடு*

*இன்றோ*
*நாளையோ*
*நான்*
*இருமிச் செத்தும்....*

*நீங்கள் எனக்கு*

*நினைவகம் அமைக்க*
*எத்தனை வீட்டைத்தான்*
*வாங்கித் தொலைப்பீர்கள்"[8]*

வறுமையில் வாடும் பெண் ஒருத்தி பாவாடை வாங்க வழியின்றி கிழிந்த பாவாடையை ஒட்டுப் போட்டு அணிந்து இருக்கிறாள். வறுமையில் தன் நிலையை எண்ணி பின் வருமாறு புலம்புகிறாள்.

*"இந்த வானமும் ஏன்*
*என்னைப் போல*
*ஒட்டுப் போட்டு ஆடை*
*உடுத்துகிறது?*

*வானத்தின் வர்ண மாநாடு*
*அந்தி*
*பூமியின் பொன்முலாம்*
*அந்தி"[9]*

இச்சமூகத்தில் வறுமையில் வாடிக் கொண்டிருக்கும் மனிதன் அவன் வழி வழியாகவே அவன் குடும்பத்தினரும் வறுமையிலே வாடுகிறார்கள் என்ற உண்மையை பின்வரும் கவிதை வரிகள் மூலம் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறார் கவிப் பேரரசு அவர்கள்.

*"அப்பனின் திருவோட்டை*
*புத்திரனுக்கு*
*இது*
*புதுப்பித்துத் தந்தது"[10]*

வறுமையில் வாடும் ஒரு ஏழைப்பெண் பருவமடைகிறாள். ஆவள் தாய் இச்செய்தியை அறிந்து பெரிதும் துன்புறுகிறாள். மூன்று வேளை சரியாக உணவு உண்டது கூட கடினம். உடுத்திய ஆடைக்கு மாற்றிக்கொள்ள பதில் ஆடை கிடையாது. இந்த சூழலில் பருவமடைந்த பெண்ணைப் பார்த்துத் தாய் ஏண்டியம்மா நீ பருவம் அடைந்தாய் என்று வருத்தமுற்று புலம்புகிறாள். இந்த நிகழ்வ வைரமுத்து அவர்களின் கவிதை ஒன்றில் தென்படுகிறது.

*"பிஞ்சு பழுத்த தென்ன*
*பேரிழவு வந்த தென்ன*
*நஞ்சு கலந்த தென்ன*
*நாசமாப் போன தென்ன*

*முக்கால் பவனுக்கே*
*முந்நூறு குறையுதடி*
*இந்த லட்சணத்தில்*
*ஏண்டியம்மா குத்தவச்ச?*

*பாவாட சட்டையே*
*பரமசிவன் கொடுத்த வரம்*
*சக்களத்தி மகளே நான்*
*தாவணிக்கு என்ன பண்ண"[11]*

சமுதாயத்தில் ஆங்கு ஆங்கு நடக்கும் சில அவலங்கள் அதில் ஒன்றுதான் மனிதன் பிச்சையெடுத்தல். ஒரு வேளை உணவு உண்ண திருவோட்டுடன் தெருவெல்லாம் அலைகிறாகள் என் செய்வது? இம்மக்களை வறுமை இப்படியொரு நிலைக்கு தள்ளிவிட்டது. தெருவெல்லாம் சுற்றினாலும் ஒரு வேளை உணவு கிடைப்பதும் அறிதாயிப் போனது காரணம் வறுமை. இதனை வைரமுத்து அவர்கள் தம் கவிதை வரிகளில் நினைவுப்படுத்துகிறார்.

*“தன் மேனியெங்கும்*
*பச்சையைப்*
*பச்சை குத்திக் கொண்டிருக்கும்*
*ஒரு பூங்கா*

*உள்ளே*
*ஒரு பிச்சைக்காரன்*
*கையில்*
*வயிற்றைப் போலவே*
*காலியாயிருந்த திருவோடு*
*கடக்கும் மனிதர்கள்*
*தங்கள் பார்வைகள்*
*அழுக்காகு மென்று*
*வேறுதிசை திரும்பினர்*

*ஒரு காக்கை இட்ட எச்சத்தில்*
*அவன்*
*பசிமயக்கம் தெளிந்து*
*வைய விழித்த போது*
*மரம்*
*திருவோட்டில்*
*ஒரு பூவைப் பிச்சையிட்டிருந்தது.”*[12]

**குழந்தைத் தொழிலாளர்கள்:**

நம் நாட்டில் நிகழும் வறுமைக் காரணமாக படிக்கும் குழந்தைகள் வேலை செய்யும் அவல நிலையும் ஏற்பட்டிருக்கிறது. தம் குடும்பத்தில் நிகழும் வறுமையின் காரணமாக சில குழந்தைகள் முதலாளிகளின் கொத்தடிமைகளாகவும் இருக்கின்றனர். பாவம் கல்வி அறிவைப் பெற வேண்டிய பருவத்தில் வேலை செய்யும் அவலநிலை அரசாங்கம் இலவச கட்டாயக் கல்வி திட்டத்தை சட்டமாய் இயற்றிய பிறகும் குழந்தை தொழிலாளர் முறையை ஒழிக்க இயலவில்லையே, காரணம் வறுமை.

குழந்தைகள் படும் துயரங்களை அவர்கள் செய்யும் பணிகளை பின்வரும் கவிதை வரிகள் மூலம் வைரமுத்து அவர்கள் புலப்படுத்துகிறார்கள்.

*“தாய்ப்பாலுக்குச் சம்பளம் கட்டச்*
*சம்பாதிக்கும் சிசுக்களை……*

*சிலுவையில் அறையப்பட்ட*
*சின்னச்சின்ன ஏசுகளை…….*
*கூப்பிடுங்கள் நேருஜி*

*குழந்தைகள் தினம்*
*கொண்டாட வேண்டும்*

*சிவகாசியின்*
*வெடிமருந்துக் கிடங்குகளில்......*
*எவருக்கோ தீக் குச்சிகளாய்*
*எரிகிறார்கள் - குழந்தைகள்*
*எரிகிறார்கள்*

*தீபாவளியின் வெள்ளோட்டமாய்*
*வெடிக்கிறார்கள் - குழந்தைகள்*
*வெடிக்கிறார்கள்*
*கந்தகக் கிடங்கில்*
*சந்தனப் பூக்கள்*

*கூப்பிடுங்கள்*
*அந்த எழுபதாயிரம் பூக்களை*
*இப்போது கூப்பிடுங்கள்*

*காஷ்மீரின்*
*கம்பளத் தொழிற் சாலைகளில்*
*தரைவிரிப்பாய் மிதிபடும்*
*தாரைகள் தாமரைகள்*

*சம்பளம் சுமக்கும்*
*சம்பளக் கன்றுகள்*

*நுரையீரல் பைந்நிறைய*
*வியாதியின் நுரைகள்*
*கூப்பிடுங்கள்*
*அந்த ஒரு லட்சம் பிஞ்சுகளை*
*உடனே கூப்பிடுங்கள்”*

(இந்தப் பூக்கள் விற்பனைக்கல்ல)

இன்னும் சில குழந்தைகள் தம் குடும்பம் வறுமைக் காரணமாக தேனீர் கடைகளில் எச்சில் குவலையைக் கழுவி வயிற்றை நிரம்புகிறார்கள். இந்த அவலம் கண்ட வைரமுத்து அவர்கள் சோகம் நிறைந்த உணர்ச்சியை வெளிப்படுத்துகிறார்.

*“டெல்லியின் டீக்கடைகளில்......*
*வட்டில் கழுவி*
*வட்டில் கழுவி*
*வயிறு கழுவும் பிள்ளைகள்”* (இந்தப் பூக்கள் விற்பனைக்கல்ல)

நேருவின் பிறந்த தினத்தை (செப்டம்பர்-5) ஒவ்வொரு ஆண்டும் குழந்தைகள் தினமாக கொண்டாடி வருகிறோம் குழந்தைகள் தினம் குழந்தைகளின் மகிழ்ச்சிக்காக கொண்டாடப்படுகிறது. ஆனால் நம் நாட்டில் சில குழந்தைகள் தொழிலாளர்களாக மாறி விட்டார்களே. இந்த சோக நிகழ்வை வைரமுத்து அவர்கள் தம் கவிதை வரிகள் மூலம் வெளிப்படுத்துகிறார்.

*"நேருஜி*
*அந்தக்*
*கொழுந்துகள் இல்லாமல்*
*குழந்தைகள் தினம்*
*கொண்டாடினால்*
*சட்டையில் நானும்*
*கட்டாயம் அணிவேன்*
*ஒரு*
*கருப்பு ரோஜா"*

(இந்தப் பூக்கள் விற்பனைக்கல்ல)

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு மிகவும் தடையாக இருப்பது வறுமை. எனவே அந்த வறுமையை சமுதாயத்தை விட்டு அரவே அகற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்ட வைரமுத்து அவர்கள் கரசேவகரர்களை அழைக்கிறார். மனிதர்கள் ஆக்குவதை விட்டு விட்டு அழிப்பதிலேயே குறியாய் இருக்கிறார்கள்.

*"கங்கை காவிரி*
*இணைக்க வேண்டும்*
*கர சேவகரே வருவீரா?*

*காடுகள் மலைகள்*
*திருத்த வேண்டும்*
*கர சேவகரே வருவீரா?*

*வறுமைக் கோட்டை*
*அழிக்க வேண்டும்*
*கர சேவகரே வருவீரா?*

*மாட்டீர்கள் சேவகரே*
*மாட்டீர்கள்*
*நாம்*
*உடைக்கவே பிறந்தவர்கள்*
*படைப்பதற்கில்லை"*[13]

வறுமையில் வாடும் ஒரு குடும்பம் புறம்போக்கு இடத்தில் ஒரு குடிசை வீடு கட்டி வாழ்ந்து வருகிறார்கள். ஆந்தக் குடிசை வீட்டையும் இடித்துத் தள்ள அரசாங்க ஊழியர்கள் வருகிறார்கள். இது கண்ட அந்தக் குடும்பத் தலைவி தனது வறுமையின் கோரத்தாண்டவத்தை பின் வருமாறு எடுத்துரைக்கிறார்.

*"ஒத்தையிலே நானிருந்து*
*ஒலைக்கரிசி போடையிலே*
*வாய்க்கரிசி கொண்டு வந்து*
*வாசப் பக்கம் நிக்கிறாக*

*எத்தி ஒதைச்சாலே*
*இத்துவிடும் சுவருக்கு*
*கடப்பாரை எதுக்கய்யா*
*கவர்மெண்டு ஆளுகளே*

*நான் பட்ட பாடு*
*நாய்ப்படுமா பேய்ப்படுமா?*
*கடையும் தயிர்படுமா?*
*காஞ்சிவரம் தறிபடுமா?*

*முன்சுவரு எழுப்பத்தான்*
*மூக்குத்தி அடகுவச்சேன்*
*பித்தாளக் கொடம் வித்துப்*
*பின் சுவரு கட்டிவச்சேன்*

*கதவு மரம் வாங்கக்*
*காசில்ல ராசாவே*
*கோணிக் கதவு செஞ்சு*
*கோட்டைக்கு மாட்டி விட்டேன்*

*சீட்டுப் புடிச்சுக்*
*சித்தாளு வேல செஞ்சி*
*ஓட்டக் கூரைக்கு*
*ஒரு பகுதி ஓடுவச்சேன்*

*கூடு கலச்சாக்கா*
*குருவிக்கு வேறமரம்*
*வீடு இடிச்சாக்கா*
*எங்களுக்கு ஏது இடம்?"*[14]

இம் மேற்க்கோள் வரிகள் " தமிழுக்கு நிறம் உண்டு" என்னும் கவிதைத் தொகுப்பில் 100-ஆம் பக்கத்தில் (கூடு) என்ற தலைப்பின் கீழ் இடம் பெற்றுள்ளன.

மழை பொழிகிறது. சோளம் விதைக்க நேரம் வந்து விட்டது. ஆனால் விதைப்புச்சோளம் கையில் இல்லை. அதை வாங்குவதற்கு கையில் பணமும் இல்லை. அவனுக்கு அவ்வளவு வறுமை இதோ விதைப்புக்காகச் சோளத்தை கடன் கேட்டு நிற்கின்றான்.

*"காசு பெருத்தவளே*
*காரவீட்டுக் கருப்பாயி*
*தண்ணிவிட்டு எண்ணெயின்னும்*
*தாளிக்கத் தெரிஞ்சவளே*

*சலவைக்குப் போட்டாச்*
*சாயம் குலையு மின்னு*

*சீல தொவைக் காதே*
*சிக்கனத்து மாதரசி*

*கால் மூட்ட வெடிச்சோளம்*
*கடனாகத் தா தாயி*
*கால்மூட்ட கடனுக்கு*
*முழு மூட்ட அளக்குறண்டி”*[15]

ஒரு பெண்ணின் பிறப்பை விளக்கும்பொழுது அந்தப் பெண் இப்படி பிறந்து வளாந்ததற்குக் காரணம் வறுமை என்பதை வைரமுத்து அவர்கள் தம் கவிதை வரிகளில் சுட்டிக்காட்டுகிறார்.

*“உட்கார்*
*பெயர்சொல்*
*பெண்ணே…..*
*அப்பா அம்மா இட்டது*
*மகாலட்சுமி*
*மாமா சூட்டியது*
*சுகப்பிரியா*
*தொழில்…………?*
*உலகின் மிகப் பழைய*
*தொழில்*
*வயது……?*
*ஆறு வருடமாய்ப்*
*பதினாறு*
*எடை…….?*
*எடை பார்க்கும் எந்திரம்*
*எடை பார்ப்பதில்லை*
*உயரம்…….?*
*வறுமைக் கோட்டில்*
*தலைதட்டும் உயரம்*
*நிறம்…….?*
*மாறிக்*
*கொண்டேயிருக்கும்*
*உன் போன்றோர் தோன்ற ஏது காரணம்*
*செல்வத்தின் எச்சமும்*
*வறுமையின் உச்சமும்”* பெய்யெனப் பெய்யும் மழை.

இக்கவிதை வரிகள் “பெய்யெனப் பெய்யும் மழை” என்னும் கவிதைத் தொகுப்பில் உள்ள (பால் வினையாளி) என்ற தலைப்பின் கீழ் இடம் பெற்றுள்ளன.

**முடிவுரை:-**

‘அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது’ என்றார் பண்டு தமிழ் மூதாட்டி. ஆனால், உண்மையில் அரிதான விஷயம் மனிதன் என்பான் செல்வத்தோடு வாழ்வதே ஆகும். முனிதனை மனிதனாக மதிக்கும் பண்பு

அவனிடம் பணம் இல்லாதவரை மட்டுமே. பணம் வந்தால் பல மனிதர்களிடம் மனிதத் தன்மையே போய் விடுகிறது. உயிர் இழந்தவன் பிணம், அன்று பணம் இழந்தவனே, பணம் இல்லாதவனே. இதனால் ஏற்படும் வறுமையின் கொடுமையைக் கவிஞர் வைரமுத்து நெக்குறுகித் தன் கண்ணீர்த் துளியில் படைத்துள்ளார். வாழும் காலம் கொஞ்சம் இதில் பேசும் பேச்சுக்கள் சிலவே வாங்கும் மூச்சும் சிறிது காலமே. ஆனால், வறுமையே வாழ்க்கையாவது வேதனையளிக்கிறது என்கிறார் கவிஞர் வைரமுத்து. அவ்வகையில் வறுமை பற்றிய நிகழ்வுகளை கவிஞர் படம் பிடித்துள்ளதை ஆய்வதாக அமைந்தது இக்கட்டுரை.

**அடிக்குறிப்புகள்:-**

[1] பாரதியார், பாரதியார் கவிதைகள், ப-36.
[2] மேலது ப-37.
[3] வைரமுத்து, வைரமுத்து கவிதைகள், ப-751.
[4] வைரமுத்து, இன்னொரு தேசிய கீதம், ப-60.
[5] வைரமுத்து, என் பழைய பனை ஓலைகள், ப-27.
[6] வைரமுத்து, வைகறை மேகங்கள், ப-51.
[7] வைரமுத்து, ரத்ததானம், ப-55.
[8] வைரமுத்து, வைரமுத்து கவிதைகள், ப-151.
[9] வைரமுத்து, வைரமுத்து கவிதைகள ப-147.
[10] வைரமுத்து, வைரமுத்து கவிதைகள ப-154.
[11] வைரமுத்து, இந்தப் பூக்கள் விற்பனைக்கல்ல.
[12] வைரமுத்து, கொடி மரத்தின் வேர்கள்.
[13] வைரமுத்து, தமிழுக்கு நிறம் உண்டு.
[14] வைரமுத்து, தமிழுக்கு நிறம் உண்டு ப-100.
[15] வைரமுத்து, பெய்யெனப் பெய்யும் மழை.